# කාර්යසාධන වාර්තාව

# செயலாற்றுகை அறிக்கை

# Performance Report

# 2015

## රාජ්‍ය ගිණුම් දෙපාර්තමේන්තුව

## அரச கணக்குகள் திணைக்களம்

## Department of State Accounts


| | | |
|---|---|---|
| මහා භාණ්ඩාගාරය | பொதுத் திறைசேரி | General Treasury |
| කොළඹ 01 | கொழும்பு 01 | Colombo 01 |

# பொருளடக்கம்


**1. அறிமுகம்** 31

**2. மீளாய்வு** 32

**3. அரசிறைப் புள்ளிவிபரம் மற்றும் முகாமைத்துவத் தகவல் பிரிவு** 33

**4. பேரண்டக் கணக்கு மற்றும் அட்டுறுக் கணக்கு இலக்கம்**

4.1 நிதிக் கூற்றுகளைத் தயாரித்தல் 34

4.2 கிரவுன் முகவர்களினூடாக பொருட்கள் கொள்வளவு செய்வதனை கூட்டிணைக்கும் நடவடிக்கை 34

4.3 பொது வைப்புக் கணக்கு மேற்பார்வையும் தொழிற்பாடும் 35

4.4 பிரதான பேரேட்டைத் திறத்தலும் நிருவகித்தலும் 35

4.5 அமைச்சு/ திணைக்களம் மற்றும் மாவட்டச் செயலகங்களின் கணக்கு நடவடிக்கைகளை செயற்படுத்தல் 35

4.6 திறைசேரியின் பொருட்டு அரச கணக்குகள் செயற்குழுவை பிரதிநிதிப்படுத்தல் 36

4.7 பொதுவான சுற்றறிக்கைகளை வெளியிடுதல் மற்றும் பல்வேறு அமைச்சுக்களுக்கும் திணைக்களங்களுக்கும் உரிய கணக்கு ஆலோசனைகளை வழங்குதல் 36

4.8 திருத்தப்பட்ட மதிப்பீட்டின் பிரகாரம் கணக்குத் தொகுதியை இற்றைப்படுத்தல் 37

**5. அரசிறைத் தகவல் மற்றும் அறிக்கையிடல் பிரிவு**

5.1 மாதாந்தக் கணக்குகளின் சுருக்கத்தை சேகரித்தல் 37

5.2 ஆசியப் பிராந்தியத்தில்அரசாங்க கணக்குஅமைப்புகளின் சங்கத்தின் பொருளாளராக நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் 38

**6. தொகுதி அபிவிருத்தி, பயிற்சி மற்றும் நிர்வாகப் பிரிவு**

6.1 அரசாங்க கணக்கீட்டின் மென்பொருளை மேம்படுத்தல், அது தொடர்பான கணக்கு பதவியினரைப் பயிற்றுவித்தல் 38

6.2 முற்பணக் கணக்குகளை தொழிற்படுத்துதல் 41

**7. நிறுவன மற்றும் நிருவாக நடவடிக்கை**

7.1 பதவியினர் 44

7.2 கட்டமைப்பு அட்டவணை 45

7.3 வளங்களை வினைத்திறனுடன் பயன்படுத்தல் 46

7.4 திறன் விருத்தி மற்றும் அறிவு விருத்தி 46

**8. நிதித் தகவல்** 49

8.1 நிதிச் செயலாற்றுகை 50

**9. 2015 நடவடிக்கைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் முன்னேற்றம்** 51-60

## 01. அறிமுகம்

அரசாங்க அமைச்சுக்கள், திணைக்களங்கள், விசேட செலவிடும் அலகுகள் அதேபோன்று மாவட்டச் செயலகங்கள் மற்றும் மாகாண சபைகள் என்பவற்றைக் கூட்டிணைத்து அரசாங்க வருமானம், அரசாங்க செலவினம், முற்பணக் கணக்குகள் மற்றும் வைப்புக் கணக்குகள் உட்பட இலங்கையின் அரசிறை நடவடிக்கைகளை அறிக்கையிடும் மையப்படுத்தப்பட்ட நிறுவனம் என்ற வகையில் அரச கணக்குகள் திணைக்களம் தொழிற்படுகின்றது.

எமது நோக்காக இருப்பது அரசிறை தகவல்கள் சம்பந்தமாக உன்னத நிலையமாக மாறுவதாகும். நிதி ஒழுங்கு விதிகளின் பிரகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் அரசிறைத் தகவல்களை வினைத்திறனுடனும் உண்மையானதாகவும் அறிக்கையிடும் பொருட்டு கணணி தொழினுட்பத்தை உச்ச அளவில் பயன்படுத்தி ஏற்றுக்கொள்ளப்பட்ட தர நிர்ணயங்களைப் பின்பற்றி தகவல்களை சேகரித்தல் மற்றும் வழங்குதல் என்பன மேற்கொள்ளப்படுகின்றன. செலவினங்கள் மற்றும் வருமானங்கள் அனைத்தினதும் தலைப்புக்களின் மூலம் ஒன்று திரட்டப்படுகின்ற நிதித் தகவல்களின் மூலம் மாதாந்தம் கணக்கு அறிக்கைகள் தயாரிக்கப்படுகின்ற அதேவேளையில், அரசாங்கத்தின் நிதிச் செயற்பாடுகள் பற்றி வருடாந்தக் கணக்குகளை மார்ச் மாதத்தினுள் தயாரித்து நிறைவு செய்யப்படுகின்றது. அதேவேளையில் அதற்கு இணையாக ஏனைய முகாமைத்துவத் தகவல்களையும் இதன் கீழ் அரச கணக்குகள் திணைக்களத்தின் மூலம் வழங்கப்படுகின்றது.

நிதி ஒழுங்கு விதி 430 இல் நிர்ணயிக்கப்பட்டுள்ளவாறு திறைசேரி புத்தகங்களிலிருந்து வெளிப்படுத்தப்படுகின்ற ஏனைய நிதித் தகவல்களை அறிக்கையிடுவதற்காகவும் கணக்காய்விற்காகவும் அந்தத் தகவல்கள் ஒவ்வொரு வருடத்தினதும் மார்ச் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் அதிபதிக்கு சமர்ப்பிப்பதும் திணைக்களத்தின் பொறுப்பாகும்.

இதற்கு மேலதிகமாக பகுப்பாய்வு நடவடிக்கைகள் மற்றும் அரசிறை முகாமைத்துவப் பணிகளுக்குத் தேவைப்படும் அரசிறைத் தகவல்கள் மற்றும் தரவுகளை இலங்கைப் பாராளுமன்றம், அரசிறைக் கொள்கைத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி மற்றும் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் ஆகியவற்றுக்கு ஆரம்பமாக சமர்ப்பிக்கப்படுகின்றது. கணக்காய்வாளர் அதிபதியினால் கணக்காய்வு செய்யப்படுகின்ற குடியரசுக் கணக்குகள் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் வருடாந்த அறிக்கையில் வெளியிடப்படுகின்றது. அதன் மூலம் இந்தத் தகவல்கள் பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்படுகின்றது. அதற்கு மேலதிகமாக அரசிறைத் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு ஏற்றுக் கொள்ளப்பட்ட சர்வதேச தர நிர்ணயங்களின் பிரகாரம் தயாரிக்கப்படுகின்ற வருமான மற்றும் செலவின பகுப்பாய்வு மற்றும் வரவு செலவு நிலைமைகள் பற்றிய குறிப்புக்கள் உட்பட ஏனைய அரசிறைத் தரவுகளும் மேற்சொன்ன அறிக்கையின் மூலம் வெளிப்படுத்தப்படுகின்றது.

அரசாங்க அமைச்சுக்களுக்கும், திணைக்களங்களுக்கும் தீர்மானம் எடுக்கும் நடவடிக்கைகளுக்காகவும் இணக்கப்பாடு மற்றும் அறிக்கையிடல் என்பவற்றை மேம்படுத்துவதற்காகவும் அரசிறைத் தகவல்களை சமர்ப்பித்தல் மற்றும் சகல தரப்பினருக்காகவும் அரசாங்கத்தின் ஒருங்கிணைந்த வருடாந்த நிதிக் கூற்றுக்களை வழங்குனர் என்ற வகையில் தொழிற்படுவதும் எமது பிரதான செயற்பணிகளிடையே அடையாளம் காணப்பட்டுள்ளது.

## 02. மீளாய்வு

2015 ஆம் ஆண்டிற்கு திட்டமிடப்பட்டவாறு திணைக்களம் தனது பொறுப்புக்களை உரிய முறையில் நிறைவேற்றிக் கொள்ளக் கூடியதாக இருந்துள்ளது. அவ்வாறு திட்டமிடப்பட்ட கடமைகளுக்கு மேலதிகமாக உயர் முகாமைத்துவத்தின் மூலம் ஒப்படைக்கப்படுகின்ற பல நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டியேற்படுகின்றது. அதனிடையே உத்தேச திறைசேரி ஒருங்கிணைந்த முகாமைத்துவத் தகவல் தொகுதியைத் (Integrated Treasury Management Information System) - (ITMIS) தயாரிக்கும் நடவடிக்கைகளுக்கும் பங்களிப்புச் செய்தமை பிரதானமான விடயமாகும். அந்த நடவடிக்கைகளின் போது தொடர்புடைய அலகுகளுக்கு தொடர்ந்தும் எமது ஆலோசனைகள் தேவையாக இருந்தது. அதனால் சகல பதவிநிலை உத்தியோகத்தர்களினதும் ஒத்துழைப்பு அதன் பொருட்டு வருடத்தினுள் குறிப்பிடத்தக்களவில் வழங்கப்பட்டுள்ளது.

அரசிறைத் தகவல்களை அறிக்கையிடுவதனை மேம்படுத்தும் செயற்திறன் மற்றும் அவற்றின் தரத்தையும் பேணுவதற்காகவும் அரசாங்கத்தின் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்குரிய அலுவலர்களை தொடர்ந்தும் அறியச் செய்யும் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் ஆற்றல்களை போசிக்கும் பொறுப்புக்களையும் திணைக்களத்தில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டது. இதன் போது எமது திணைக்களத்தின் நிபுணத்துவ அறிவின் ஊடாக நிர்மாணிக்கப்பட்ட “Windows" இனை அடிப்படையாகக் கொண்ட புதியCIGAS மென்பொருளினை பயன்படுத்துவதினூடாக கணக்கு அறிக்கைகளை உரிய விதத்தில் தயாரித்து உரிய கால எல்லைக்குள் அரச கணக்குகள் திணைக்களத்திற்கு பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தமை அரச கணக்குகளைத் தயாரிக்கும் நடவடிக்கையில் தெளிவான மாற்றமொன்றை ஏற்படுத்தக் கூடியதாக இருந்தது. மேலும் புதிய மாதரிகளுக்கு அமைவாகமாதாந்த வருமானம் செலவினம் தொடர்பான தகல்களை உயர் முகாமைத்துவத்திற்கு வழங்குவதற்கு 2015 ஆம் ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

நிதியாண்டின் இறுதியில் கணக்குகளை மூடுதல் பற்றி தேவையான வழிகாட்டல்களை சகல அமைச்சுக்களுக்கும் திணைக்களங்களுக்கும் வழங்குவதன் மூலம் தற்போதிருக்கும் நிதி ஒழுங்குவிதிகள் மற்றும் தர நிர்ணயங்களுக்கு இணங்கியதாக அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் வருடாந்த ஒதுக்கீட்டுக் கணக்குகளைத் தயரிப்பதற்கு தேவையான ஆலோசனைகளை வழங்குதல் திணைக்களத்தின் மற்றுமொரு பொறுப்பாக இருந்தது. அதன் மூலம் உரிய கால வரையறைக்குள் கணக்காய்வாளர் அதிபதியினால் சான்றுப்படுத்தப்பட்ட குடியரசுக் கணக்குகளை நிதி, திட்டமிடல் அமைச்சின் வருடாந்த அறிக்கையில் சேர்ப்பதற்கான பொறுப்புக்களை இலகுபடுத்துகின்றது. மேலும் உரிய விதத்தில் அந்தந்த நிறுவனங்களின் ஒதுக்கீட்டுக் கணக்குகள், வருமானக் கணக்குகள் மற்றும் முற்பணக் கணக்குகளைத் தயாரித்து கணக்காய்வாளர் அதிபதிக்கு சமர்ப்பித்தல் மற்றும் அந்தக் கணக்குகளின் தரவுகளை பிரதான கணக்குத் தொகுதிக்கு இணையாக சான்றுப்படுத்துவதும் தனது பொறுப்புக்களுக்குள் அதி உன்னத மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டது. இந்த வருடத்தில் மூன்று சந்தர்ப்பங்களில் இடம்பெற்ற அமைச்சுக்களின் விடயப்பரப்பின் மாற்றத்தின் காரணமாக அரசிறை அறிக்கையிடலுக்கு ஏற்பட்ட தாக்கத்தினால் கணக்கு அறிக்கையிடல் சம்பந்தமாக பிரச்சினைக்குரிய நிலையொன்று ஏற்பட்ட போதிலும் ஏனைய வருடங்களிலும் பார்க்கக் கூடுதலான செயற்திறனுடனும் அர்ப்பணிப்படனும் ஏனைய நிறுவனங்களுடன் கூட்டிணைந்து அந்தப் பிரச்சினைகளைத் தீர்க்கக் கூடியதாக இருந்தது.

நிதி ஒழுங்குவிதிகளின் கீழும் ஒதுக்கீட்டுச் சட்டத்திற்கு இணங்கியதாகவும் அந்தந்த நிறுவனங்களின் ஒதுக்கீடுகள் மாற்றுப் படிவங்கள் மூலம் ஏற்பாடுகளை பரிமாற்றிக் கொள்ளுதல் மற்றும் மேலதிக ஏற்பாடுகளை ஏற்பாடு செய்தல் போன்றவை சம்பந்தமாகவும் கடும் மேற்பார்வையுடன் தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களத்துடன் இணைந்து உரிய விதத்தில் அவற்றைக் கணக்கு வைக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடியதாக இருந்தது. இந்த சகல நடவடிக்கைகளின் மூலமும் சரியானதும் தர நிர்ணயங்களைக் கொண்டதுமான அரச கணக்குகள் தகவல்களை வழங்குவதற்காக உயர்ந்த பட்ச முயற்சிகளை அரச கணக்குகள் திணைக்களம் ஈடுபட்டிருந்தது.

மேற்குறிப்பிட்ட பொதுவான மீளாய்வுக்குரியதாக திணைக்களத்தின் ஒவ்வொரு பிரிவுகளினதும் பங்களிப்புகள் 2015 ஆம் ஆண்டு நடவடிக்கைத் திட்டத்தின் இலக்குகளுக்கு இணங்கியதான செயலாற்றுகை பின்வருமாறு.

## 3. அரசிறை புள்ளிவிபரம் மற்றும் முகாமைத்துவ தகவல் பிரிவு

திணைக்களத்தின் மூலம் வழங்கப்படுகின்ற அரசிறை நடவடிக்கைகள் பற்றிய தகவல்களை, 1986 ஆம் ஆண்டின் அரச நிதி புள்ளிவிபரவியல் (Government Finance Statistics)கையேட்டில் தர நிர்ணயங்களுக்கு ஏற்ப தயாரித்தல் மற்றும் பொருளாதார வகைப்படுத்தலின் பிரகாரம் அரசாங்க வருமானம் மற்றும் அரசாங்க செலவினம் பற்றிய அடிப்படை புள்ளிவிபரவியல் குறிப்புக்களைத் தயாரித்து தேவையின் அடிப்படையில் அரசிறைக் கொள்கைத்

திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது. அதேபோன்றுஅரச நிதி புள்ளிவிபரவியல் (Government Finance Statistics) 2001/14கையேட்டில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய முறைமையின் பிரகாரம் தயாரிக்கும் தயார் நிலைக்காக ஆரம்பிக்கப்பட்ட நடவடிக்கைகள் இந்த வருடத்தினுள் தொடர்ந்தும் மேற்கொள்வதும் இந்தப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட்டது. 2015 மார்ச் 16 ஆம் திகதி முதல் மார்ச் 27 ஆம் திகதிக்கு இடைப்பட்ட கால எல்லையில் சர்வதேச நாணய நிதியத்தின் புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் தொழினுட்ப ஒத்துழைப்பை வழங்கும் தூதுக் குழுவின் மூலம் புதிய முறைமை பற்றிய தொழினுட்ப ஒத்துழைப்பு செயலமர்வொன்று எமது திணைக்களத்தில் நடாத்தப்பட்ட அதேவேளையில், அதில் அரசிறைப் புள்ளிவிபரங்களில் நிறுவனங்களுடனான கொடுக்கல் வாங்கல் வரைசட்டகத்தை விரிவுபடுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அந்தத் தூதுக் குழுவின் ஆலோசனையின் பிரகாரம் அரசிறைப் புள்ளிவிபரங்களை புதிய முறைமைக்கு அமைவாக தயாரிக்கும் நடவடிக்கைகளை தொடர்ந்தும் மேற்கொள்வதற்கும் மேம்படுத்துவதற்கும் இலங்கை மத்திய வங்கிக்கும் எமது திணைக்களத்திற்கும் இடையில் கூட்டிணைப்புக் குழுவொன்றைத் தாபிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

2005 முதல் 2014 வரை வருடாந்தம் மேற்கொள்ளப்பட்ட முதலீட்டின் ஊடான உருவான நிலையான சொத்துக்கள் மற்றும் அவற்றின் நிதி வழிகள் பற்றிய விரிவான அறிக்கையையொன்றைத் தயாரித்து அரசாங்க கணக்காய்வாளர் அதிபதியிடம் சமர்ப்பிக்கம் நடவடிக்கை இந்தப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட்டது. 2015 ஆம் ஆண்டினுள் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய கருத்திட்டங்களின் தகவல்களை 2005 முதல் 2015 வரையான

அறிக்கையில் உள்ளடக்குவதற்காகத் தயாரிப்பதும் வருடத்தின் இறுதி அரையாண்டில் மேற்கொள்ளப்பட்டது.

அரசாங்க அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் சொத்துக்களை மதிப்பீடு செய்யும் நடவடிக்கையை அடிக்கடி மேற்பார்வை செய்து, அவற்றைத் துரிதப்படுத்துவதற்கு தேவையான வழிகாட்டல்கள் வழங்குவதும் மேற்கொள்ளப்பட்டது. 2015 ஆம் ஆண்டின் இறுதியில் விலை மதிப்பீட்டு திணைக்களத்திற்கு கிடைத்த அரசாங்க சொத்துக்கள் பற்றிய தகவல்களை உள்ளடக்கிய 6,304 கோப்புகளில் 6,143 கோப்புகளில் உள்ளடங்கிய அரசாங்க சொத்துக்களின் மதிப்பீட்டு நடவடிக்கைகளை பூர்த்திசெய்யக் கூடியதாக இருந்தது.

அதற்கு மேலதிகமாக உள்நாட்டு இறைவரித் திணைக்களம், சுங்கத் திணைக்களம், மது வரித் திணைக்களம் போன்ற நிறுவனங்களின் அரசாங்க சொத்துக்களை ஒன்று திரட்டுவது சம்பந்தமான அறிக்கையை தயாரிப்பதும் அவற்றை ஆய்வு செய்வதும் மேற்கொள்ளப்பட்டது.

2015 ஆம் ஆண்டின் அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டங்களை மேற்பார்வை செய்து அவற்றில் கூடுதலாகக் கவனம் செலுத்த வேண்டிய கருத்திட்டங்கள் பற்றி வலியுறுத்திக் கூறுவதுடன் முதல் 3 காலாண்டுகளின் நிதி முன்னேற்றங்கள் பற்றிய அறிக்கை தயாரிக்கப்பட்டது.

## 4. பேரண்ட மற்றும் அட்டுறு கணக்கு பிரிவு

### 4.1 நிதிக் கூற்றுகளைத் தயரித்தல்

2015 ஆம் ஆண்டின் ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு, மற்றும் வைப்புக் கணக்குகளைத் தயாரித்தல் சம்பந்தமாக 04 அரச கணக்குகள் சுற்றறிக்கைகள் இந்த வருடத்தில் வெளியிடப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக செலவினத் தலைப்பு 208 மீண்டுவரும் மற்றும் மூலதனச் செலவுகளின் மதிப்பீட்டுத் தொகை உண்மைச் செலவு அடங்கிய 2014 ஆம் ஆண்டிற்கான ஒருங்கிணைந்த ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் ஒருங்கிணைந்த வருமானக் கணக்கு தயாரிக்கப்பட்டுள்ளன. விசேடமாக 2003 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க நிதி முகாமைத்துவ (பொறுப்பு) சட்டத்தின் 13(1) பிரிவின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் 2014 ஆம் ஆண்டுக்குரிய அரசிறைச் செயலாற்றுகை, நிதி நிலைமை, பணப் பாய்ச்சல் கூற்றுக்களைத் தயாரித்து, கணக்காய்வாளர் அதிபதியின் கணக்காய்வு அபிப்பிராயத்துடன் கணக்குக் கூற்றுக்களைப் பிரசித்தப்படுத்துவது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 4.2 கிரவுண் முகவர்களினூடாக பொருட்கள் கொள்வனவு செய்வதனை கூட்டிணைக்கும் நடவடிக்கை

சுகாதார அமைச்சு மற்றும் ஆட்பதிவுத் திணைக்களத்திற்கு அத்தியவசியமாகத் தேவைப்படும் மருந்துப் பொருட்களையும் அச்சுக் கடதாசிகளையும் கிரவுண் முகவர்களினூடாகப் பெறுவதற்குத் தேவையான நேரடித் தலையீடு இந்தத் திணைக்களத்தின் மூலம் மேற்கொள்ளப்படுவதுடன், அதன் கீழ் 2015 ஆம் ஆண்டிற்குள் சுகாதார அமைச்சுக்குரிய இன்டென்டு 27 பொருட்களைப் பெறுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள அதேவேளையில், அதன் பெறுமதி ரூபா 157 மில்லியன் ஆகும். அதேபோன்று ஆட்பதிவுத் திணைக்களம் இன்டென்டு 2 பொருட்களைப் பெறுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள அதேவேளையில், அதன் பெறுமதி ரூபா 25 மில்லியன் ஆகும்.

## 4.3 பொதுவைப்புக் கணக்குகளின் கண்காணிப்பு மற்றும் தொழிற்பாடு

பாராளுமன்றத்திற்குச் சொந்தமான அரசிறைக் கட்டுப்பாட்டை வலுவூட்டுவதற்கான அரச கணக்குகள் சுற்றறிக்கை 243/2015 இன் பிரகாரம் பொது வைப்புக் கணக்குகள் 6000/15 தொகுதிகளின் கீழ் பொது வைப்புக் கணக்குகள் இல்லாதொழிக்கப்பட்டு வைப்புப் பேரேட்டில் வைப்புக் கணக்குகள் தொகுதி 18 இன் கீழ் மீண்டும் வகைப்படுத்தி கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

## 4.4 பிரதான பேரேட்டைத் திறத்தலும் நிருவகித்தலும்

2015 ஆம் ஆண்டின் 8,300 தொகுதியின் கீழ் பிரதான பேரேட்டில் வெளிநாட்டுக் கடன்களைப் பெறும் பொருட்டு 27 கணக்குகள் திறக்கப்பட்டுள்ளன. இதன் கீழ் சக்திவலு மற்றும் வலையமைப்புச் செயற்திறன் செயற்திட்டங்கள் 03 இற்கும், நீர் வழங்கல் மற்றும் துப்பரவு ஏற்பாட்டு அபிவிருத்திச் செயற்திட்டங்கள் 09 இற்கும், பாலம் அபிவிருத்திச் செயற்திட்டங்கள் 03 இற்கும், கடற்படை பெற்ரோல் வள்ளங்கள் 02 ஐக் கொள்வனவு செய்வதற்கான செயற்திட்டங்கள் 01 இற்கும், புகையிரதப் பாதை மற்றும் பெருந் தெருக்கள் அபிவிருத்திச் செயற்திட்டங்கள் 05 இற்கும், அனர்த்த முகாமைத்துவ செயற்திட்டங்கள் 01 இற்கும், தொழில் மற்றும் திறன் விருத்தி செயற்திட்டங்கள் 02 இற்கும், நகர அபிவிருத்திச் செயற்திட்டங்கள் 01 இற்கும், இலங்கை பால் அபிவிருத்தி செயற்திட்டங்கள் 02 இற்கும் இந்த கடன் தொகைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

குடியரசுக் கணக்கில் நிதியல்லாத சொத்துக்களை வெளிப்படுத்தும் நோக்கில் பின்வரும் பிரதான பேரேடு திறக்கப்பட்டுள்ளது. அதாவது 9151 - கட்டடம் மற்றும் நிர்மாணம், 9152 - இயந்திரம் மற்றும் உபகரணம், 9153 - காணி, 9160 - செய்துகொண்டிருக்கின்ற வேலை, 9165 - மூலதனச் சொத்துக்கள் ஒதுக்கக் கணக்கு (சொத்து, பொறி மற்றும் உபகரணம்), 9166 - மூலதனச் சொத்துக்கள் ஒதுக்கக் கணக்கு (செய்துகொண்டிருக்கின்ற வேலை), 9180 - குத்தகை உரிமை 9181 - குத்தகை உரிமையாளர், 9182 - குத்தகை சொத்துக்கள் ஒதுக்கக் கணக்கு, 9185 - திறைசேரி முறியின் கழிவு 9186 - திறைசேரி முறியின் மிகை விலை, 9184 - தபால் திணைக்களத்தினால் முகவர் நிலையங்களினூடாக மேற்கொள்ளப்படுகின்ற கொடுக்கல்வாங்கல், 9183 - குத்தகை சொத்துக்களுக்கான முதலீடு போன்ற 13 பிரதான பேரேட்டுக் கணக்குகள் 2015 ஆம் ஆண்டினுள் திறக்கப்பட்டுள்ளன.

## 4.5 அமைச்சு/ திணைக்களம் மற்றும் மாவட்டச் செயலகங்களின் கணக்கு நடவடிக்கைகளை செயற்படுத்தல்

2015 ஆம் ஆண்டினுள் 50 அரசாங்க அமைச்சுக்கள், 95 திணைக்களங்கள், 19 விசேட செலவின அலகுகள், 25 மாவட்டச் செயலகங்களின் கணக்கு நடவடிக்கைகளைத் செயற்படுத்துதல் மற்றும் அதற்கான கணக்கீட்டுச் சேவை அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ள அதேவேளையில், மேலதிக ஒதுக்கீடு வழங்குதல் சம்பந்தமாக 816 அனுமதிப் பத்திரங்கள், நிதி ஒழுங்கு விதி 66 மாற்றல் பத்திரம் 1,243 மற்றும் நிதி ஒழுங்கு விதி 69 மாற்றல் பத்திரம் 121 ஆகியவற்றுக்காக கணக்கு வைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 4.6 திறைசேரியின் பொருட்டு அரச கணக்குகள் செயற்குழுவை பிரதிநிதிப்படுத்தல்

2015 ஆம் ஆண்டிற்காக அரசாங்கக் கணக்கு செயற்குழுக் கூட்டங்களின் 07 அமர்வுகளை நடாத்தவிருந்த போதிலும் உரிய தினத்தில் நடாத்தாமல் பிரிதொரு தினம் வழங்கப்பட்டதன் காரணமாக கணக்கு செயற்குழுக் கூட்டங்களின் 03 அமர்வுகள் மாத்திரம் இடம்பெற்ற அதேவேளையில் இதற்காக பங்குபற்றி திணைக்களப் பிரதிநிதிகளினால் கூட்டங்களின் போது ஏற்படுகின்ற அரச கணக்குப் பிரச்சினைகள் சம்பந்தமாக தொழில்ரீதியான தலையீடு வழங்கப்படுகின்றது.

## 4.7 பொதுவான சுற்றறிக்கைகளை வெளியிடுதல் பல்வேறு அமைச்சுக்களுக்கும் திணைக்களங்களுக்கும் தொடர்புடைய கணக்கு ஆலோசனைகளை வழங்குதல்

நியதிச் சட்டமுறை சமூகப் பொறுப்புக்கள் (CSR - நிதியத்தைக் கணக்கு வைப்பதற்குத் தேவையான கணக்கு முறைமைகள் பற்றி கொள்கை வகுத்தல், பொருளாதார அலுவல்கள், சிறுவர், இளைஞர் மற்றும் கலாச்சார அமைச்சுக்கு முன்மொழிவுகளை சமர்ப்பித்தல், 243/2015 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம், வெளிநாட்டலுவல்கள் அமைச்சினால் சேகரிக்கப்படுகின்ற பரிசுகள் 6000/19 நன்கொடை (உள்நாட்டு) வைப்புத் தொகுதியின் கீழ் கணக்குவைத்தல் சம்பந்தமாக அரச நிதித் திணைக்களத்திற்கு ஆலோசனை வழங்குதல், ஊழியர் ஏற்பாட்டு நிதியம் (221-02-04 கருத்திட்டம்) கணக்குவைத்தல் பற்றிய உத்தேச கணக்கு முறையொன்றை அறிமுகப்படுத்தி அதனை 2017 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்த வேண்டுமென தொழில் திணைக்களத்திற்கு ஆலோசனை வழங்குதல், 2003.02.16 விமான நிலைய வாடகை வருமானத்தின் கீழ் திரட்டப்படுகின்ற வருமானத்தைக் கணக்குவைத்தல் மற்றும் அதன் சட்டரீதியான பின்னணி பற்றி கணக்காய்வு விசாரணைகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகள் சம்பந்தமாக எதிர்காலத்தில் எடுக்க வேண்டிய நடவடிக்கை பற்றிய ஆலோசனை வழங்குதல் மற்றும் விவசாயத் திணைக்களத்தின் பண்ணைகளைப் பராமரித்தல் மற்றம் விதைகளின் விற்பனை முற்பணக் கணக்கு வருமானம் தற்போது நானாவித வருமானம் 2003.02.99 தலைப்பு இலக்கத்தின் கீழ் கணக்குவைப்பதற்கும் எதிர்காலத்தில் திரட்டப்படுகின்ற வருமானத்தின் அளவைக் கவனத்திலெடுத்து போதுமான அளவு வருமானம் திரட்டப்படுமானால் புதிய வருமானக் குறியீட்டின் கீழ் எதிர்காலத்தில் கணக்குவைப்பதற்கும் நடவடிக்கை எடுக்குமாறு அரசிறைக் கொள்கைத் திணைக்களத்திற்கு ஆலோசனை வழங்குவதும் 2015 ஆம் ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதேபோன்று புகையிரத் திணைக்களத்தினால் பணிமுற்பணக் கணக்கிற்குப் பதிலாக பிரதான பேரேட்டினூடாக மேற்கொள்ளப்படுகின்ற பணிகளை பணிமுற்பணக் கணக்கின் மூலம் மேற்கொள்வதற்கும் புகையிரத அனுமதிப் பத்திரங்களை வழங்கும் போதும் நிலுவை வருமானத்தை தவிர்த்துக் கொள்ளும் நோக்கில் பணத்தின் மூலம் செலுத்துவதற்குப் பதிலாக குறுக்குக் குறிப்புகளின் மூலம் வருமானத்தை அறிக்கையிடுவதற்கு தேவையான அலோசனை வழங்கப்பட்டுள்ளது.

அட்டுறு அடிப்படையின் கீழ் அரச கணக்குகளை வைத்தல் தொடர்பான நடவடிக்கை நிகழ்ச்சித்திட்டங்களை தயாரித்து திறைசேரி செயலாளரின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள அதேவேளையில் தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ள அட்டுறு

அடிப்படையில் அரச கணக்குகளை வைப்பதற்குரிய சுற்றறிக்கையின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்காக பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

## 4.8 திருத்தப்பட்ட மதிப்பீட்டின் பிரகாரம் கணக்குத் தொகுதியை இற்றைப்படுத்தல்

2015 ஆம் ஆண்டினுள் மூன்று முறை அமைச்சுக்கள் திருத்தப்பட்டதன் காரணமாக அமைச்சுக்களிடையே ஏற்பாடுகளைப் பகிர்ந்தளிப்பதனை கணக்கு வைத்தல், முற்பணக் கணக்கு மற்றும் பொது வைப்புக் கணக்கு மீதியை வழங்குதல் மற்றும் 2015 ஆம் ஆண்டில் நவம்பர் மாதம் வெளியிடப்பட்ட திருத்தப்பட்டவாறான வரவு செலவுத் திட்டத்தின் பிரகாரம் கணக்குத் தொகுதியை இற்றைப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டது

# 5. அரசிறைத் தகவல் மற்றும் அறிக்கையிடல் பிரிவு

## 5.1 மாதாந்தக் கணக்கு சுருக்கத்தை சேகரித்தல்

2015 ஆம் ஆண்டில் 50 அமைச்சுக்கள், 25 மாவட்டச் செயலகங்கள், 114 திணைக்களங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களின் மாதாந்தக் கணக்குகச் சுருக்கங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. 2014 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தினதும் குறைநிரப்பு மதிப்பீட்டினதும் மூலதனம் மற்றும் மீண்டெழும் செலவுகளாக ஒதுக்ககப்பட்டிருந்த தொகை 3,475 பில்லியன் ரூபா ஆகும். மாதாந்த கணக்கு சுருக்கங்களை சமர்ப்பிக்க வேண்டிய இலக்குவைக்கப்பட்ட திகதிகள் வருடாந்த சுற்றறிக்கைகளின் மூலம் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் உரிய திகதிக்கு முன்னர் மாதாந்தக் கணக்கு சுருக்கத்தை சமர்ப்பிப்பதற்கு தாமதித்த நிறுவனங்கள் குறிப்பிடத்தக்க அளவில் இருப்பதாக வருடத்தின் ஆரம்பத்தில் அவதானிக்கப்பட்ட போதும், பின்னர் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்ட நினைவூட்டல்கள் மூலம் வருடம் முடிவடையும் போது தொடர்புடைய நிறுவனத்தினால் உரிய திகதிக்கு முன்னர் மாதாந்தக் கணக்கு சுருக்கத்தை சமர்ப்பித்தலானது மகிழ்ச்சிகரமான மட்டத்தை அடையப்பெற்றது என்பதை கீழே தரப்பட்டுள்ள பொதுத் திறைசேரியின் கணனி அச்சிடல் இணையத்தளத்திற்கு வெளியிடப்பட்டுள்ள திகதிகளின் மூலம் தெளிவாகின்றது. அதன் பிரகாரம் அந்தந்த மாதத்தின் உண்மைக் கணக்கு தகவல்களை முன்வரும் மாதத்தில் நடுப்பகுதியாகும் போது வெளியிடக் கூடியதாக இருந்தது.

| மாதம் | திறைசேரி கணனி அச்சிடலை வெளிப்படுத்திய திகதி |
|---|---|
| சனவரி | 2015 மார்ச் 23 |
| பெப்ரவரி | 2015 மார்ச் 31 |
| மார்ச் | 2015 ஏப்ரல் 29 |
| ஏப்ரல் | 2015 மே 13 |
| மே | 2015 ஜூன் 11 |
| ஜூன் | 2015 ஜூலை 11 |
| ஜூலை | 2015 ஆகஸ்ட் 11 |
| ஆகஸ்ட் | 2015 செப்டம்பர் 09 |
| செப்டம்பர் | 2015 ஒக்டோபர் 13 |
| ஒக்டோபர் | 2015 நவம்பர் 12 |
| நவம்பர் | 2015 டிசம்பர் 15 |
| டிசம்பர் | 2016சனவரி 22 |

இதற்கு மேலதிகமாக சேகரிக்கப்பட்ட செலவு மற்றும் வருமானத் தகவல்களை தெடர்ந்தும் பகுப்பாய்வு செய்து அந்த தகவல்கள் இலங்கை மத்திய வங்கி, புள்ளிவிபரவியல் திணைக்களம், அரசிரைக் கொள்கைத் திணைக்களம், திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களம் மற்றும் வரவு செலவுத் திணைக்களம் ஆகிய நிறுவனங்களுக்கு தீர்மானம் எடுப்பதற்காக பயன்படுத்திக் கொள்ளும் பொருட்டு வழங்கப்பட்டுள்ளன.

## 5.2 ஆசிய பிராந்தியத்தின் அரச கணக்குள் அமைப்புகளின் சங்கம்

ஆசிய பிராந்தியத்தின்அரச கணக்குள் அமைப்புகளின் சங்கத்தை (AGAOA) தாபிப்பதற்கு முன்னோடியாக இருந்து, அதன் ஆரம்ப உறுப்பினராகிய இலங்கை 2015 ஆம் ஆண்டினுள் இந்தச் சங்கத்தின் பொருளாளராக நடவடிக்கை மேற்கொண்ட அதேவேளையில், இந்தத் திணைக்களம் சங்கத்தின் 2015 ஆம் ஆண்டிற்கான வருடாந்தக் கணக்குகளைத் தயாரித்துள்ளது. இந்த ஆண்டிலும் சங்கத்தின் நிதிப் பொறுப்பை வகித்து பிராந்திய ரீதியில் அரச கணக்குள் திணைக்கக்களத்தின் சேவை வியாபித்துள்ளது.

# 6. முறைமைத் தொகுதி, பயிற்சி மற்றும் முற்பணக் கணக்குப் பிரிவு

## 6.1 அரசாங்கக் கணக்கீட்டு மென்பொருளை மேம்படுத்துதல், அது தொடர்பாக கணக்குப் பதவியினருக்கு பயிற்சியளித்தல்

மத்திய அரசாங்கத்தினதும் மாகாண சபைகளினதும் சகல அமைச்சுக்களினாலும் திணைக்களங்களினாலும் பயன்படுத்தப்படுகின்ற CIGAS (Computerized Integrated Goverment Accounting System) கணணி மென்பொருள் தொகுதியின் அபிவிருத்தி, பராமரிப்பு, பயிற்சியளித்தல் மற்றும் தேவையான ஆலோசனைகளை வழங்குதல் என்பன இந்தப் பிரிவின் பொறுப்பாகும். அதற்கு மேலதிகமாக GPS கணணி மென்பொருளின் புதிய பிரதியை வழங்குதல், பழைய பிரதியை இற்றைப்படுத்துதல் மற்றும் மற்றும் ஆலோசனை வழங்குதல் என்பன மேற்கொள்ளப்படுகின்றது.

அதன் பிரகாரம், 2015 ஆம் ஆண்டில் Windows அடிப்படையிலான புதிய சிகாஸ் நிகழ்ச்சித்திட்டங்களில் தொடர்ந்தும் மேற்கொள்ள வேண்டிய மாற்றங்களை மேற்கொண்டு 2016 ஆம் ஆண்டுக்காக நவீனமயப்படுத்தி தயாரிக்கப்பட்டது. பணிப்பாளர் நாயகம் அவர்களின் ஆலோசனைக்க அமைவாக 2015 ஆம் ஆண்டில் ஒக்டோபர் மாதம் முதல் சொத்துக்களை கணக்கு வைக்கக்கூடிய விதத்தில் புதிய CIGAS நிகழ்ச்சித்திட்டங்கள் நவீனமயப்படுத்தப்பட்டுள்ளன. ஆண்டிறுதி CIGAS செயலமர்வுகளின் போது சொத்துக்களை கணக்கு வைப்பது பற்றி தொடர்புடைய அலுவலர்களுக்கு தெரியப்படுத்துதல் மற்றும் பயிற்சியளித்தல் என்பன மேற்கொள்ளப்பட்டன. அதன் பிரகாரம், 2015 ஆம் ஆண்டின் இறுதியில் 34 நிறுவனங்களின் சொத்துக்களை கணக்கு வைத்தல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஏனைய நிறுவனங்களும் 2016 ஆம் ஆண்டில் சொத்துக்களை கணக்கு வைப்பதனை ஆரம்பிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றன. குத்தகை வாகனங்களை கணக்கு வைக்கக் கூடிய விதத்தில் CIGAS நிகழ்ச்சித்திட்டம் மேம்படுத்தப்பட்டுள்ளது. அதன் பிரகாரம்,ரூபா 11,901,246,175.56 பெறுமதியைக் கொண்ட 3656 குத்தகை வாகனங்களை கணக்கு வைப்பது 2015 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டன.

2016 ஆம் ஆண்டுக்காக தொடர்ந்தும் பழைய CIGAS மூலம் கணக்குகளின் சுருக்கத்தை பொறுப்பேற்காமை பற்றியும் நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளன. அதன் பிரகாரம், 2015 ஆம் ஆண்டில் அரச கணக்குகள் திணைக்களத்திற்கு நேரடியாக மாதாந்த கணக்குகளின் சுருக்கத்தை அறிக்கையிட்டுள்ள 183 நிறுவனங்களிடையே 181 நிறுவனங்களுக்கு புதிய சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் கணக்குகளின் சுருக்கம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இலங்கை புகையிரதத் திணைக்களத்தினால் சாதாரண கணக்கு முறைகளுக்கு முரணாக அறிக்கையிடப்பட்டு வந்த அதேவேளையில், அதுவும் தற்போது பணிமுற்பணக் கணக்கினூடாக சிகாஸ் மூலம் அறிக்கையிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. அதன் பொருட்டு கூட்டங்களை நடாத்தி தேவைகளைக் கண்டறிவதற்கும் அலுவலர்களைப் பயிற்றுவிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

ஆண்டிறுதி செயலமர்வுகள் / கருத்தரங்கு தொடர்கள் மாவட்ட மட்டங்களில் நடாத்தப்பட்ட அதேவேளையில், அரச கணக்குகள் திணைக்களத்திலும் சிகாஸ் ஒரு நாள் செயலமர்வு நடாத்தப்பட்டது. மேலும் இந்த செயலமர்வுக்காக விடயப் பொறுப்பு கணக்காளர்களையும் அலுவலர்களையும் பங்குபற்றச் செய்த அதேவேளையில், அதன் மூலம் அறிவூட்டியதற்கு மேலதிகமாக விடயத்தின் பொறுப்புக்கள் பற்றி கணக்காளர்களின் கவனத்தை செலுத்துவதும் இதன் நோக்கமாக இருந்தது. அதன் பிரகாரம் 11 சிகாஸ் ஒரு நாள் செயலமர்வுகள் இந்தத் திணைக்களத்தில் நடாத்தப்பட்ட அதேவேளையில், 23 ஆண்டிறுதி சிகாஸ் செயலமர்வுகள் நடாத்தப்பட்டது.

ஆண்டிறுதி சிகாஸ் செயலமர்வுகளின் போது கொழும்பு மற்றும் அதனைச் சூழவுள்ள அமைச்சுக்களினதும் திணைக்களங்களினதும் கணக்குப் பிரிவுக்குக் பொறுப்பான கணக்காளர்கள், விடயப் பொறுப்பு அலுவலர்கள் 268 நபர்களை 2015.12.07,14,28 ஆகிய தினங்களில் மிலோதா நிறுவனத்திற்கு வரவழைத்து நவீனமயப்படுத்தப்பட்டுள்ள புதிய சிகாஸ் நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றி அறிவூட்டப்பட்டுள்ளன. இதன்போது பொதுவாக கணக்காளர்கள் முகங்கொடுக்க வேண்டியேற்படுகின்ற கணக்கு ரீதியான பிரச்சினைகள் கலந்துரையாடப்பட்ட அதேவேளையில், விசேடமாக அரசிறை முகாமைத்துவத்திற்குப் பொறுப்பான அரசாங்க அலுவலர்கள் என்ற வகையில் கணக்காளர்களுக்கு புதிய தொழில்நுட்பங்களுக்கு இணங்கியதாகவும் புதிய அனுபவங்களைக் கொண்டதாகவும் பொருளாதாரச் சவால்களுக்கு முகங்கொடுக்கக் கூடியதாக நடவடிக்கைகளை மேற்கொள்வது சம்பந்தமாகவும் உரிய நேரத்தில் சரியான கணக்குகளை அறிக்கையிடுவதிலுள்ள முக்கியத்துவம் பற்றியும் வலியுறுத்தப்பட்டது.

இந்த ஒருநாள் செயலமர்வுகளின் போது 2015 ஆம் ஆண்டு இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும் விதம், 2016 ஆம் ஆண்டுக்கான கணக்குகளை ஆரம்பிக்கும் விதம் அதேபோன்று ஒவ்வொரு திணைக்களங்களுக்கும் உரிய பிரச்சினைகள் பற்றியும் கலந்துரையாடக் கூடியதாக இருந்த அதேவேளையில், புதிய CIGAS நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கையேடு அடங்கிய இருவட்டு ஒன்றையும் சகல கணக்கு அலகுகளுக்கும் வழங்கக் கூடியதாக இருந்தது. அதேபோன்று ITMIS கருத்திட்டம் பற்றியும் பணிப்பாளர் நாயகம் அவர்களினால் கணக்காளர்களின் கவனத்தை ஈர்க்கச் செய்யப்பட்டது.

இந்த செயலமர்வுகளுக்கு மேலதிகமாக ஒவ்வொரு நிறுவனங்களினதும் வேண்டுகோளின் பிரகாரம் அந்த நிறுவனங்களுக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்ட 15 விஷேட CIGAS நிகழ்ச்சித்திட்டங்கள் பின்வரும் இடங்களில் நடாத்தப்பட்டன.

| | பயிற்சிச் செயலமர்வு இடம்பெற்ற திகதி | நிறுவனம் | பயிற்சிச் செயலமர்வு இடம்பெற்ற இடம் |
|---|---|---|---|
| 1 | சனவரி20 | இலங்கை நில அளவைத் திணைக்களம் | திணைக்களத்தின் கேட்போர்கூடம் |
| 2 | சனவரி30 | பொலிஸ் திணைக்களம் | கணினிப் பயிற்சி நிலையம் |
| 3 | பெப்வரி 06 மற்றும் 07 வரை | விவசாயத் திணைக்களம் | விவசாயத் திணைக்களம் - பேராதனை |
| 4 | மார்ச் 13 | ஹம்பாந்தோட்டை மற்றும் மாத்தறை மாவட்ட செயலகம் | ஹம்பாந்தோட்டை நிருவாகத் தொகுதி |
| 5 | மார்ச் 20 | கமநல அபிவிருத்தித் திணைக்களம் | மீப்பே கல்வி அபிவிருத்தி நிலையம் |
| 6 | மார்ச் 25 | தேசிய மிருகக் காட்சிச்சாலைகள் திணைக்களம் | பின்னவல |
| 7 | மார்ச் 30 | பொது நிருவாக அமைச்சு | அரச கணக்குகள் திணைக்களம் |
| 8 | மே 16 | தொழில் திணைக்களம் | தொழில் திணைக்களம் |
| 9 | மே 19 | அனுராதபுர மாவட்ட செயலகம் | அனுராதபுர பிக்கு பல்கலைக் கழகம் |
| 10 | மே 29 | மேல் மாகாண சபை | தகவல் தொழில்நுட்ப வளங்கள் அபிவிருத்தி நிறுவகம் - மருதானை |
| 11 | ஜுன் 16 | களுத்துறை மாவட்ட செயலகம் | களுத்துறை மாவட்ட செயலகம் |
| 12 | ஜுன் 26 | வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களம் | மீப்பே கல்வி அபிவிருத்தி நிலையம் |
| 13 | செப்டம்பர் 10 மற்றும் 11 | சுகாதார அமைச்சு | மீப்பே கல்வி அபிவிருத்தி நிலையம் |
| 14 | ஒக்டோபர் 08 மற்றும் 09 | நுவரெலியா மற்றும் மாத்தளை மாவட்ட செயலகம் | நுவரெலியாமாவட்ட செயலகம் |
| 15 | ஒக்டோபர் 15 மற்றும் 16 | பதுளை மற்றும் மொனராகலை மாவட்ட செயலகம் | பதுளைமாவட்ட செயலகம் |

கணணி மென்பொருள் தொகுதி அபிவிருத்தி, பராமரிப்பு, பயிற்சியளித்தல் மற்றும் தேவையான ஆலோசனைகளை வழங்குவதற்காக இந்தப் பிரிவினால் அன்றாடம் மேற்கொள்ளப்படுகின்ற சேவைகள் பின்வருமாறு

-  கணக்குத் தொகுதிகளைப் பேணுவதற்கு தேவையான ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களை வழங்குதல்
-  காணப்படும் விதி மற்றும் ஒழுங்குவிதிகளின் பிரகாரம் கணக்குகளை வகைப்படுத்தல் மற்றும் கணக்கு குறியீடுகளை உருவாக்கி கணக்கு அறிக்கைகளை பேணுவதற்காகவும் பிரதான கணக்கு அலகுகளுக்கு அவற்றை அனுப்புவதற்கும் துணை நிற்றல்
-  குறைந்த காலத்தில் பிரதான கணக்கு அலகுகளினால் பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்கு தகவல்களின் செல்லுபடியாகும் காலத்தை பரிசீலனை செய்து ஏற்றுக் கொள்ளப்பட்ட மாதிரியின் மூலம் அரச கணக்குகள் திணைக்களத்திற்கு அனுப்புவதற்கு வசதிகளை வழங்குதல்
-  கணக்கு மற்றும் புள்ளிவிபரவியல் தகவல்களைப் பெற்றுக் கொள்ளக்கூடிய விதமாக அமைச்சுக்களிலிருந்தும் திணைக்களங்களிலிருந்தும் கிடைக்கின்ற தரவுகளைப் பேணுகின்ற பிரதான கணக்கு தரவுத் தொகுதிக்கு தரவுகளைச் சேர்த்தல், ஆலோசனைகளை

வழங்குதல் தரவுகளை செல்லுபடியாக்குதல் மற்றும் ஏற்றுக் கொள்ளப்பட்ட மாதிரிக்கு தரவுகளை மாற்றுதலும் வழங்குதலும்

- வருடாந்த வரவு செலவின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள் மற்றும் அது தொடர்பான செலவினங்கள் மற்றும் முன்வரும் வருடத்திற்கான தேவைகளை ஏற்பாடு செய்து உயர் தரத்திலான கணக்கு முறையொன்றைப் பேணுவதற்கு அமைச்சுகளுக்கும், திணைக்களங்களுக்கும் உதவக்கூடிய பயிற்சி கற்கை நெறிகளை மேற்கொள்ளுதல்

## 6.2 முற்பணக் கணக்குகளை தொழிற்படுத்துதல்

### 6.2.1 அரசாங்க அலுவலர்களின் பீ முற்பணக் கணக்கு

01. சகல அமைச்சுக்களினாலும் திணைக்களங்களினாலும் 2014.12.31 ஆம் திகதியுடன் முடிவுற்ற வருடத்திற்குரியதாக சமர்ப்பிக்கப்படுகின்ற நி.ஓ 506 டீ அறிக்கையின் பிரகாரம் கட்டுப்பாட்டுக் கணக்கு, தனிக் கணக்குகளின் மீது மற்றும் திறைசேரி மீதிகள் உள்ளடங்களாக முற்பண கணக்கின் பொருட்டு சீராக்க அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டது. அந்த அறிக்கையின் பிரகாரம் 36 நிறுவனங்களின் மாற்றங்கள் அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் உரிய நிறுவனங்களை அடையாளம் கண்டு மேற்குறிப்பிட்ட கணக்குகளுக்கிடையில் காணப்படுகின்ற மாற்றங்களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தொடர்புடைய நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டது. அந்த 17 நிறுவனங்களும் 2015 ஆம் ஆண்டில் கணக்குச் சுருக்கங்களின் மூலம் மாற்றங்கள் தீர்க்கப்பட்டுள்ள அதேவேளையில், ஏனைய நிறுவனங்களில் காணப்படுகின்ற மாற்றங்களைத் தீர்ப்பதற்கு எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகள் பற்றி தற்போது பின்னூட்டல்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

02. மேலும் 2015 ஆம் ஆண்டில் சகல அமைச்சுக்களின் திணைக்களங்களிலும் தனிக் கடன் மீதி வகைப்படுத்தலின் பிரகாரம் அரசாங்கத்திற்கு அறவிட வேண்டிய கடன் நிலுவைகள் (காலப் பகுப்பாய்வின் பிரகாரம்) தயாரிக்கப்பட்ட அறிக்கையின் பிரகாரம் இடமாற்றம் பெற்றுச்சென்ற அலுவலர்கள்ரூபா 273 மில்லியன், சம்பளமற்ற விடுமுறையில் வெளிநாடு சென்றுள்ள அலுவலர்கள்ரூபா8 மில்லியன், கூட்டுத்தாபனங்கள் / சபைகள் மற்றும் மாகாண சபைகளுக்காக நிரந்தரமாக விடுவிக்கப்பட்டுள்ள அலுவலர்கள்ரூபா129 மில்லியன், மரணித்துள்ள அலுவலர்கள்ரூபா44 மில்லியன், ஓய்வுபெற்ற அலுவலர்கள்ரூபா415 மில்லியன், சேவையை விட்டுச் சென்ற/ சேவையை முடிவுறுத்தியுள்ள அலுவலர்கள்ரூபா206 மில்லியன், வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ள அலுவலர்கள்ரூபா499 மில்லியன், ஏனையவை ரூபா32 மில்லியன் கடன் நிலுவைகள் இருப்பது அவதானிக்கப்பட்டள்ளது. அந்தக் கடன் நிலுவைகளை வரவு செலவு சுற்றறிக்கை இலக்கம் 118, தாபன விதிக்கோவைxxivஅத்தியயாயத்தின் 04 ஆம் உறுப்புரை மற்றும் xxivஅத்தியாயம் 4:5 உப பிரிவின் பிரகாரம் அறிவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

03. தேசிய வரவுசெலவுத் திட்டச் சுற்றறிக்கை 01/2015 இன் அட்டவணை 01 இல் குறிப்படப்பட்டுள்ள விதமாக 34 நிறுவனங்களுக்குரிய மீதிகளை ஒப்படைத்தல் மற்றும் வரவுசெலவுத் திட்டச் சுற்றறிக்கை 05/2015 இன் அட்டவணை 02 இல் குறிப்படப்பட்டுள்ள 11 நிறுவனங்களுக்குரிய மீதிகளை ஒப்படைத்தல் / ஒப்படைத்துக்கொள்ளுதல் சம்பந்தமான மேற்பார்வை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் 2015 ஆம் ஆண்டுக்காக திறைசேரிக் கணக்குகளைத் தீர்க்க முன்னர் 2015 ஆம் ஆண்டில் இடம்பெற்ற

நிறுவனங்களின் திருத்தங்களின் காரணமாக முற்பண "பீ" கணக்குகளின் மாற்றங்கள் சரியான விதத்தில் இடம்பெற்றுள்ளதா என்பதை மேற்பார்வை செய்து அது பற்றி அரசாங்க அலுவலர்களின் முற்பண "பீ" கணக்கிற்காக வழங்கப்படுகின்ற திறைசேரிக் கணக்குக் கூற்றுக்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

### 6.2.2. திறைசேரியின் நானாவித முற்பணக் கணக்குகள்

இந்த முற்பணக் கணக்குகளின் ஊடாக மாவட்டச் செயலகங்களுக்கு நெல்லைக் கொள்வனவு செய்வதற்காக வழங்கப்பட்டிருந்த முற்பணத்தை அறிவிடுதல் மற்றும் காணாமல் போன காசு, முத்திரை மற்றும் பற்றுச்சீட்டு போன்றவற்றுக்காக வழங்கப்பட்டிருந்த முற்பணங்களை அறவிடுவதற்கு ஏற்படுகின்றமை. 2015 ஆம் ஆண்டுக்குரியதாக பின்வரும் விதமாக மாவட்டச் செயலகங்களினால் காசின் மூலம் கடன் நிலுவைகள் தீர்க்கப்பட்டுள்ளன.

| கணக்கு இலக்கம் | மாவட்டச் செயலகம் | தீர்க்கப்பட்ட நிதி (ரூபா) |
|---|---|---|
| 7000/0/0/25003/419 | அநுராதபுரம் | 5,700.00 |
| 7000/0/0/25003/420 | அம்பாறை | 5,388,826.23 |
| 7000/0/0/25003/428 | கண்டி | 1,120,000.00 |
| 7000/0/0/25003/443 | மாத்தளை | 30,000.00 |
| **முழு மொத்தம்** | | **6,544,526.23** |

உணவு ஆணையாளர் திணைக்களத்தினால் மாவட்டச் செயலகங்கள் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட நெல் /அரிசி என்பவற்றை அரசாங்கத்தின் விலைக் கொள்கையை நடைமுறைப்படுத்தி விற்பனை செய்யும் போது ஏற்பட்ட நட்டம் சம்பந்தமாக தொடர்புடைய மாவட்டச் செயலகங்களுடன் இணைந்து மேற்கொள்ளப்பட்ட சீராக்க நடவடிக்கைகளின் பிரகாரம் சுமக்க வேண்டி ஏற்பட்ட நட்டம் ரூபா 163,037,216.09 என அடையாளங் காணப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் 2015 ஆம் ஆண்டில் உணவு ஆணையாளர் திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட நட்டத்தைப் பதிவழிப்பதற்கான விண்ணப்பம் சம்பந்தமான முன்னேற்றம் பின்வருமாறு.

| மாவட்டச் செயலகம் | பதிவழிப்பதற்காக திறைசேரியின் பிரதிச் செயலாளரின் அனுமதி கிடைத்துள்ள தொகை (ரூபா) |
|---|---|
| பொலநறுவை | 68,861,634.45 |
| கண்டி | 715,204.50 |
| பதுளை | 790,528.00 |
| **முழு மொத்தம்** | **70,367,366.95** |

